1983 மார்ச் 8]

குற்றாலத்தில் ஏழை, நடுத்தர மக்களுக்கான விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 312—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோடைக்கால மலை வாழ் நகரமாகிய குற்றாலத்தில் ஏழை, நடுத்தர மக்களுக்கு வசதி யாக சுற்றுலாத் துறையின் கீழ் விடுதி கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்தில், நடுத்தர பிரயாணி களின் வசதிக்காக சுற்றுலாத் துறை ரூ. 7.97 லட்சம் நகரீயத் திற்கு ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகையைப் பயன்படுத்தி, நகரீயம் 100 படுக்கை வசதி கொண்ட ஒரு துயிலக விடுதியை அமைத்து நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. துரைராஜ : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் நடுத்தர மக்களுக்கு வசதியாக விடுதி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். மிக்க நன்றி. இந்தத் திட்டமானது அந்த நகரிய மன் றத்தால் எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்ற விவ ரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, இதை சுற்றுலாத் துறையின் மூலமே கட்டவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் இடம் கிடைப்பதிலே வேறு சங்கடங்கள் வந்த காரணத்தால் நகரியத்திற்குச் சொந்தமான 7.27 ஏக்கர் நிலம் இருக்கிற அந்த அடிப்படையிலே வைத்து இப் போதுதான் அந்தத் தொகையை அவர்களுக்கு ஒதுக்கியிருக்கி கிறோம். அநேகமாக இந்த ஆண்டு அவர்கள் கட்டுமானப் பணி களை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திலே ஏற்கெனவே நகரத்தின் மையப் பகுதியிலே லாட்ஜ்கள் எல்லாம் இருக்கின்றன. இப்போது குறைந்த வாடகை என்ற முறையிலே ஏற்படுத்தப்படக் கூடிய இந்த விடுதி எந்த இடத்திலே கட்டப்பட உள்ளது என் பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, நகரியத்திற்குச் சொந்தமான இடம் சர்வே எண். 459 பகுதியிலே 63/1, 64/1, 64/4, 65/8, 66, 63 என்று இங்கே தரப் பட்டு இருக்கிறது. அநேகமாக எனக்குத் தெரிந்தவரை குற்றா

லத்திலே நகரத்திலே நுழைகிற போது ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்துகின்ற அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாக நான் அறிகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, குற்றாலத்திற்கு சீஸன் காலங்களில் ஏழை எளிய மக்கள் அதிகமாக வருகிறார்கள். கூட்டம் அதிகமாக வரக்கூடிய நேரங்களில் தனியார் லாட்ஜ்களில் அங்கே வருகிற கூட்டத்தைப் பார்த்து அதிக அளவில் வாடகை கூடுதலாக கேட்கிறார்கள். அவர்கள் இவ்வளவு தான் வாடகை வாங்க வேண்டுமென்று அரசாங்கமே நிர்ணயித்து ஒரு சுற்றறிக்கை அனுப்புவார்களா? கூடுதலாக வாடகை கேட்கும் லாட்ஜுகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை நிர்ணயிக்கிற அதிகாரம் சுற்றுலாத் துறையிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறையினர் அதற்கு பதில் அளிப்பார்கள். ஆனால் சீசன் நேரத்தில் இப்படி இட நெருக்கடி ஏற்படுகிறது என்பதை மனதில் வைத்து, குறைந்த வருமானக்காரர்கள் தங்குவதற்கு இன்னும் அதிக அளவில் வசதியை ஏற்படுத்துவதற்கு கட்டிடங்களாகவே விலைக்கு கிடைக்குமானால் அவற்றையும் வாங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

**பவானி அருகே காவிரி ஆறும், பவானி ஆறும் கூடுகின்ற இடமான கூடுதுறையை அழகு படுத்தும் திட்டம்.**

*வினா எண். 313—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் பவானி அருகே காவிரி நதியும், பவானி நதியும் கலக்குமிடமான 'கூடுதுறையினை' சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். பெரியார் மாவட்டத்தில் பவானி ஆறும் காவிரி ஆறும் கூடுகின்ற இடமான கூடுதுறையை முதற்கட்டமாக மாவட்ட சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எத்தனை லட்சம் பொருள் செலவில் இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்ற இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.